





# நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயம்

## இராஜ கோபுர நிர்மாணம்

*பேரன்புடையீர்!*

வரலாற்று சிறப்பு மிக்க நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்திற்கு இராஜ கோபுரம் ஒன்றை அமைப்பதற்கு நாகேஸ்வரப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

வரலாற்று சிறப்பு மிக்கதும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அடியவர்கள் வருகைதந்து வழிபட்டு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிச்செல்லும் ஆலயத்தில் இராஜ கோபுரமின்மை ஓர் குறைபாடாக பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது கூடவே ஆலய உபாசகர், அறங்காவலர்கள் மற்றும் அடியவர்களின் பெருவிருப்பின் அடிப்படையிலும் இப் பெரு முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

ஐந்து தளங்களைக்கொண்டதும் அடித்தளம் (முதலாவது தளம்) கருங்கல்லினாலும் மிகுதி தளம் சிமென்ற் கற்களைக்கொண்டும் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள மேற்படி இராஜ கோபுர நிர்மாணப்பணிக்கான மொத்த மதிப்பீடு ரூபா 06 கோடியாகும் அத்தோடு இராஜ கோபுர கட்டுமானப்பணிகளை எதிர்வரும் 03 ஆண்டுகளில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம். கடந்த 04.10.2023ம் திகதி எம் பெருமானுடைய கேணித்தீர்த்த திருவிழாவன்று நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் ஆலய உபாசகர் சிவஸ்ரீ க.சிவசண்முக குருக்கள் அவர்களால் ரூபா 101000/= நிதியுதவி வழங்கி இராஜ கோபுர கட்டுமானப்பணி இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

நாகதம்பிரான் மெய்யடியார்களே! மேற்படி இராஜ கோபுர நிர்மாணப்பணியை நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் பூர்த்தி செய்வதற்கு தங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கி எம்பெருமானுடைய திருப்பணியில் தாங்களும் பங்குதாரர்களாகுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நேரடியாக நிதி வழங்க விரும்புவோர் ஞாயிறு தினங்களில் ஆலய கரும பீடத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம். வங்கி மூலமாக செலுத்த விரும்புவோர் கீழ் காணும் வங்கி கணக்கு மூலமாக அனுப்பி வைக்கலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

வங்கி கணக்கு விபரம்
கணக்கின் பெயர் : - Nagarkovil Poorvika Nagathampiran Alaya Paripalana Sabai
வங்கியின் பெயர் : - Bank of Ceylon, Nelliady
கணக்கிலக்கம் :- நடைமுறைக் கணக்கிலக்கம் (Current Account Number) 0071373532
சேமிப்புக் கணக்கிலக்கம் (Savings Account Number) 0071373459

தொடர்புகளிற்கு:-

- தலைவர் :- 0765284133
- பொருளாளர் :- 0777589873
- செயலாளர் :- 0772972339

பரம்பரை தலைவரும் பரிபாலன சபையினரும்
பூர்வீக நாகதம்பிரான் ஆலயம்
நாகர்கோவில்